பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 06 சனிக்கிழமை 19.04.2025 கதிர் 161

## இனி இது ரகசியம் அல்ல!

அறிவிக்கப்பட்டபடி உள்ளாட்சித் தேர்தலுக்கு இன்னும் 15 நாட்களே இருக்கின்றன. ஆனால் மே 6 வாக்களிப்பு நடக்குமா என்பது இன்னமும்குழப்பகரமாகவே ☞ 2

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அநீதிக்கு எந்த ஆட்சியாளரும் நீதி தரவில்லை

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

தேர்தல் காலத்தில் பல்வேறு தரப்பினரும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்கள் இழந்த நீதியை வழங்குவதாக அரசியல் மேடைகளில் சத்தமிட்டாலும், அதிகாரத்தைப் பெற்ற பிறகு எந்த ஆட்சியாளரும் இவர்களுக்குரிய நீதியை வழங்கவிரும்பவில்லைஎன்பதுஇன்றும் தெளிவான உண்மையாகும். எனவே வீண் பேச்சுக்களை தவிர்த்து நீதியை நிலைநாட்ட உண்மையைக் கண்டறிய அனைவரும் ஒன்றிணைவோம் என எதிர்க்கட்சி தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டுவெளியிட்டுள்ளசெய்தியில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர்



மேலும் தெரிவித்ததாவது:

கடவுளின் குமாரனாகக் கருதப்படும் இயேசு கிறிஸ்து மரணத்தை வென்று ☞ 8

## நிகழ்நிலை காப்புச் சட்ட நீக்க சட்ட வரைவு வர்த்தமானியில்

நிகழ்நிலை காப்புச் சட்டத்தை இரத்து செய்வதற்காக புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தனிநபர் பிரேரணையாக முன்வைத்த 'நிகழ்நிலை பாதுகாப்பு' தொடர்பான (நீக்கம்) சட்டமூலம்' வர்த்தமானி அறிவித்தலில் ☞ 8

## பெரிய வெள்ளி தினமான நேற்று தேவாலயம் மீது துப்பாக்கிச் சூடு

### சந்தேகநபர் கைது

மனம்பிட்டியவில் உள்ள தேவாலயம் ஒன்றின் மீது, பெரிய வெள்ளி தினமான நேற்றிரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்த வன்முறையில் ஈடுபட்டவர் என்ற ☞ 2

## ஊடகங்களுக்கும் அநுர அச்சுறுத்தல்

தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கப்படாது என ஜனாதிபதி குறிப்பிடுவது ஒழுக்கத்துக்கு முரணானதாகும். இது தொடர்பில் செய்திகளை வெளியிடும் ஊடகங்களையும் ஜனாதிபதி அச்சுறுத்துகின்றார். ஜனாதிபதியால் தெரிவிக்கப்படும் இந்த கருத்துக்கள் முற்றுமுழுதாக தேர்தல் சட்டத்துக்கு முரணானதாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வருண தீப்த ☞ 8

### தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறாத சபைகளுக்கு

# நிதி ஒதுக்கீடு தரமுடியாவிட்டால் நாட்டை பிரிக்க முடிவெடுங்கள்

### சிறீதரன் எம்.பி. ஆவேசம்

**தேசியமக்கள்சக்திவெற்றிபெறாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீட்டு தரமுடியாது என ஆளும்தரப்புக் கூறுமேயானால், வடக்கு கிழக்கில் எமக்கான தனிநாட்டைப் பிரித்துத் தருவதற்கான தீர்மானத்தை அவர்கள் மேற்கொள்ளவேண்டும். இல்லாவிடின் அதனை முன்னிறுத்தி நாம் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றுக்குத் தயாராவோம். ஆகவே நாம் தென்னிலங்கையுடன் இணைந்து பயணிப்பதாஅல்லதுபிரிந்துசெல்வதா என்பதைத் தீர்மானிப்பதற்கான கதவொன்றை தற்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க** ☞ 2

## பிள்ளையானின் சாரதியும் கைது

மட்டக்களப்பு வாழைச்சேனையில் வைத்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின்தலைவரும்முன்னாள்இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என அழைக்கப்படும்சந்திரகாந்தனின்சாரதியான ஜெயந்தன் என்பவர் நேற்றுக் காலையில் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் 2006ஆம் ஆண்டு டிசம்பர் 15 கடத்தப்பட்டுக்காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 2025 ஏப்ரல் 8 பிள்ளையான் அவரது காரியாலயத்தில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டார். அவர் ☞ 2

### கிழக்கு அடிப்படைவாதக் குழுக்கள் தொடர்பில்

## மேடைகளில் தெரிவிப்பதை விட்டு சட்டத்தை நிலைநாட்டவேண்டும்

### ஜனாதிபதிக்கு முஜிபுர் முகத்திலடித்தாற்போல் பதில்

கிழக்கில் அடிப்படைவாத அமைப்புகள் இருக்குமானால் ஜனாதிபதி அது தொடர்பில் பகிரங்க மேடைகளில் பேசி இனங்களுக்கிடையில் சந்தேகத்தை ஏற்படுத்தாமல் சட்டத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டுவரும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, அங்கு ☞ 2

## 3 ஆளும்தரப்பு எம்.பிக்கள் இருந்தும் வவுனியா பிணவறை செயலிலில்லை

### சுட்டிக்காட்டி அடைக்கலநாதன் எம்.பி. அறிக்கை

ஆளுங்கட்சியை சேர்ந்த பிரதி அமைச்சர் உட்பட நாடாளுமன்றஉறுப்பினர்கள்மூவர்வன்னிப்பிரதேசத்தில் இருந்தபோதிலும் வவுனியா வைத்தியசாலையில் பல நாட்களாகஇயங்காமல்இருக்கின்றபிரேத அறையின் குளிரூட்டியைச் சீர்செய்வது தொடர்பில் தமது சுகாதார அமைச்சின் கவனத்துக்கு கொண்டுசெல்லாமை கவலைக்குரிய விடயம் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளார். அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியாவைத்தியசாலையின்பிரேத அறையின் குளிரூட்டி பல மாதங்களாக செயற்படாமல் காணப்படுகிறது. இதன் காரணமாகஇறந்தவர்களின்உறவினர்கள் தமது சொந்தச் செலவில் சடலத்தை செட்டிக்குளம் வைத்தியசாலையின் குளிரூட்டியில் வைத்து மீண்டும் வவுனியாவைத்தியசாலைக்கு கொண்டு வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பல ஆயிரக்கணக்கான பணத்தை செலவழித்து சடலத்தை ☞ 2

### நிதி ஒதுக்கீடு தொடர்பான கருத்துக்காக

## தேர்தல் ஆணைக்குழுவில் ஜனாதிபதி மீது முறைப்பாடு

மன்னாரில் தேர்தல் பிரசாரத்தின்போது உள்ளூராட்சிமன்றங்களுக்கான நிதி ஒதுக்கீடுதொடர்பில்ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்ட கருத்து தேர்தல் விதிமீறல் எனக் குறிப்பிட்டுத் தமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும், இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மன்னாரில் வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்திருக்கும் உள்ளூராட்சிமன்றங்களால் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும்போது அவற்றுக்குக் கண்ணைமூடியவாறு ☞ 8

## சட்டவிரோதமான தையிட்டி விகாரை கட்டுமானத்திற்கு ஜேவியே காரணம்

### கஜேந்திரகுமார் நேற்று நேரடிக் குற்றச்சாட்டு



தையிட்டி விகாரை கட்டப்பட்ட விதம் சட்டவிரோதம்தான் என்ற நிலைப்பாட்டில் எந்தவொரு தமிழ் அரசியல் கட்சியிடமும் மாற்றுக் கருத்து இருக்கப்போவதில்லை எனச் சுட்டிக்காட்டிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவர் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இருக்கின்றது. மக்களுக்கு மட்டுமல்ல அதிகாரிகளுக்கும்கூட அது குழப்பகரமாகவே இருக்கின்றது. தேர்தல் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்கள் தூ-ங்கிவழிகின்றன, அங்கு பணிகள் மிக மந்தமாகவே நடக்கின்றன என்கிறார்கள் விடயம் அறிந்தவர்கள். தேர்தல் குறைந்பட்சம் இன்னும் ஒரு வாரத்திற்காகவது பின்போடப்படலாம் என்கிற எதிர்பார்ப்பே இதற்குக்காரணம் என்கிறார்கள். திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தை நாடும் வழக்குகளின் தீர்ப்புக்கள் வந்த பின்னரே தேர்தல் குறித்த திகதியில் நடக்குமா இல்லையா என்பதே தெளிவாகும் என்கிற நிலையில்தான் அதிகாரிகள் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட வழக்குகள் மேலும் சில மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்கள் கூட்டணியின் மனுவும் அதில் ஒன்று. அந்த மனுக்களை திங்கட்கிழமை விசாரணைக்கு எடுப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. ஆனால், இது போன்று தாக்கல் செய்யப்பட்ட சில வேட்புமனுக்களை, காலதாமதத்தைக் காரணம் காட்டி தொடர்ந்து விசாரிக்க முடியாது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவே நிராகரித்துவிட்டதால், திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படும் மனுக்களும் அவ்வாறு நிராகரிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள்தான் அதிகம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபுறத்தில் இளைஞர்களின் வயதை உறுதிப்படுத்துவதற்கான பிறப்புச்சான்றதழை உறுதிப்படுத்தும் அதிகாரம்மிக்கவர் என்கிற விடயத்தில் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியன ஒன்றுக்கொன்று மாறுபாடாக வழங்கியுள்ள உத்தரவுகள் தொடர்பில் தெளிவைப் பெற சம்பந்தப்பட்ட தரப்புக்களில் எதுவும் உயர் நீதிமன்றத்தை நாடாத நிலையில் அதன் மீதும் தீர்ப்புக்கள் எதுவும் வழங்கப்படுவதற்கான வாய்ப்புக்களும் இல்லை.

இதற்கும் மேலாக அனைத்து உள்ளாட்சி சபைகளுக்கும் ஒரே நேரத்தில் உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட்டே ஆகவேண்டும் என்கிற பிடிவாதத்தோடு ஆளும்தரப்பினர் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இவை எல்லாம் இருப்பினும் தேர்தல் எப்படியும் குறிப்பிட்ட திகதியில் நடக்கப்போவதில்லை என்று அதிகாரிகள் தரப்பில் நம்பப்படுகின்றது.

அதற்குஅவர்கள்மற்றொருகாரணத்தையும் கூறுகின்றார்கள். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய தேர்தல் இடைநிறுத்தப்பட்ட கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட 18 சபைகளினதும் வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் மிகத் தாமதமாகவே தொடங்கப்பட்டன. உரிய காலப் பகுதிக்குள் அந்தப் பணிகளை முடித்து வாக்குச்சீட்டுக்களை விநியோகித்து முடிப்பது சாத்தியமாகக்கூடியதல்ல. அப்படிப்பட்ட ஒரு நிலை வந்தால். சில சபைகளில் தேர்தலை நடத்தி மற்றைய சபைகளுக்கு சில நாள்கள் கழித்து தேர்தல் நடத்துவது உசிதமாக இருக்காது என்பதால் அனைத்துச் சபைகளுக்கும் ஒரே திகதியில் வாக்களிப்பு நடக்கும் வகையில் தேர்தல் திகதியைப் பிற்போடுவதைத் தவிர ஆணைக்குழுவிற்கு வேறு வழியில்லை என்பதே அவர்கள் கூறும் காரணம்.

ஆக மொத்தத்தில் தேர்தல் நடக்கும்...... ஆனா நடக்காது.... என்கிற வடிவேல் நகைச்சுவை மாதிரித்தான் நகர்கிறது. இந்த உள்ளாட்சித் தேர்தல் போன்று இவ்வளவு குழப்பகரமான தேர்தல் இலங்கை வரலாற்றிலேயே இருக்க முடியாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நிதி ஒதுக்கீடு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறந்துவிட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் தெரிவித்தார்.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவாகி, புதிய ஆளும்தரப்பு அமைக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்திருக்கும் நிலையில், தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றுகூட இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அவ்வாறிருக்கையில் நாம் காணிகளை விடுவிப்போம், வீதிகளைத் திறப்போம் என்று ஜனாதிபதி கூறுவதெல்லாம் மக்களை ஏமாற்றுவதற்கான யுக்தியின் ஒரு வடிவமேயாகும். மாறாக அவரும் ஏனைய சிங்களத்தலைவர்களைப்போல தன்னை ஒரு சிங்கள தேசியத் தலைவராகவே அடையாளப்படுத்துகின்றார் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, 'வடக்கு மக்கள் பாரம்பரியமான தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் பெரும் எதிர்பார்ப்புடன் என்மீது நம்பிக்கைவைத்து அமோக ஆதரவளித்துள்ளார்கள். என்மீதான நம்பிக்கையை நிச்சயம் பாதுகாப்பேன்' எனக் குறிப்பிட்டார்.

அதேவேளை மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டங்களில், தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்திருக்கும் உள்ளூராட்சி மன்றங்களால் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும்போது அவற்றுக்குக்கண்ணை மூடியவாறு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் எனவும், வேறு கட்சிகள் ஆட்சியமைத்திருக்கும் உள்ளூராட்சிமன்றங்களால் சமர்ப்பிக்கப்படும் நிதிஒதுக்கீட்டு முன்மொழிவுகள் குறைந்தபட்சம் 10 தடவைகளேனும் ஆராயப்படும் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இக்கருத்து தொடர்பில் கடும் விசனத்தை வெளியிப்படுத்திய சிவஞானம் சிறிதரன், இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

தமது கட்சி ஆட்சியமைக்கும் உள்ளூராட்சிமன்றங்களுக்கு கண்ணை மூடியவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும், ஏனைய கட்சிகளின் முன்மொழிவுகள் நன்கு ஆராயப்படும் என்றும் ஜனாதிபதி வெளியிட்டிருக்கும் கருத்து அவரது அறிவிலித்தனத்தைக் காண்பிக்கிறது. ஏனெனில் நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுபவருக்கு ஒட்டுமொத்த மக்களும் வாக்களிப்பதில்லை. அவருக்கு வாக்களிக்காத எத்தனையோ பேர் இந்நாட்டில் இருக்கிறார்கள். அவ்வாறிருக்கையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறுவது எதேச்சதிகாரப் போக்கிலான ஒரு அராஜகச் செயற்பாடாகும். இது ஜனாதிபதியிடம் இருக்கும் இனவாதத்தின் மற்றொரு முகமாகும்.

இருப்பினும் இக்கூற்றை தமிழ் மக்கள் ஒரு நல்ல சகுனமாகக் கருதமுடியும். ஏனெனில் வட, கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி மன்றங்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உள்ளடங்கலாக தமிழ் அரசியல் கட்சிகள்தான் ஆட்சியமைக்கும். அவ்வாறிருக்கையில் இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீட்டை வழங்கமுடியாது என ஆளும்தரப்புக் கூறுமேயானால், எமக்கான தனிநாட்டைப் பிரித்துத்தருவதற்கான தீர்மானத்தை அவர்கள் மேற்கொள்ளவேண்டும்.

இல்லாவிடின் அதனை முன்னிறுத்தி நாம் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றுக்குத் தயாராவோம். ஆகவே நாம் தென்னிலங்கையுடன் இணைந்து பயணிப்பதா அல்லது பிரிந்து செல்வதா என்பதைத் தீர்மானிப்பதற்கான கதவொன்றை தற்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திறந்துவிட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

அதேபோன்று அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவாகி, புதிய ஆளும்தரப்பு அமைக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்திருக்கும் நிலையில், அரசியல்கைதிகளில் இன்னமும் ஒருவர்கூட விடுவிக்கப்படவில்லை. வீதிகள் புனரமைக்கப்படவில்லை. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தொழிற்சாலைகள் நிறுவப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டைப்பொறுத்தமட்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிமுகப்படுத்திய நடவடிக்கைகளையே இவர்கள் தொடர்ந்து முன்னெடுக்கிறார்கள். புதிய ஆளும்தரப்பிடம் சிறந்த பொருளாதாரக்கொள்கையோ, முன்நோக்கிப் பயணிப்பதற்கான திட்டமிடலோ, உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளோ இல்லை.

அவ்வாறிருக்கையில் நாம் காணிகளை விடுவிப்போம், வீதிகளை விடுவிப்போம் என்று ஜனாதிபதி கூறுவதெல்லாம் மக்களை ஏமாற்றுவதற்கான யுக்தியின் ஒரு வடிவமேயாகும். மாறாக அவரும் ஏனைய சிங்களத் தலைவர்களைப்போல தன்னை ஒரு சிங்கள தேசியத் தலைவராகவே அடையாளப்படுத்துகின்றார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது என்றார்.

## பெரிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகத்தில் 38 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சந்தேகநபர் ஜீவமான கிறிஸ்து தேவாலயத்தின்மீதுதுப்பாக்கிச்சூடுநடத்தினார் என்று கூறப்படுகிறது. இரண்டு தடவைகள் அவர் சுட்டுள்ளார். இது தேவாலயத்தின் போதகருடன் (தேவகாதிவரியா) ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக நிகழ்ந்த சம்பவம் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த சம்பவத்தில் தேவாலயத்தின் ஒரு ஜன்னல் சேதமடைந்தாலும், யாருக்கும் காயம் ஏற்படவில்லை. விசாரணைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

## பிள்ளையானின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாத்தத தடைச் சட்டத்தின் கீழ் 90 நாட்களுக்குத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையை யயடுத்து கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கடத்தலுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் பிள்ளையானின் சாரதியான ஜெயந்தனை கொழும்பில் இருந்து சென்ற குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் அவரது வாழைச்சேனை வீட்டில் வைத்துக் கைது செய்து கொழும்புக்கு கொண்டு சென்றுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## 3 ஆளும்தரப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செட்டிக்குளத்துக்கும் வவுனியாவுக்கும் கொண்டுசெல்லவேண்டிய நிலைமை உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ஏற்படுகிறது. இது இந்த பிரதேசத்து மக்களுக்கு பெரும் சுமையை ஏற்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகும்.

தமது ஆட்சியில் பாலும் தேனும் ஓடும் என்று அறிக்கை விட்டு மக்களை பொய்யாக திசை திருப்பி பிரதி அமைச்சுக்களையும் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக்கொண்ட தேசிய மக்கள் சக்தியினர் வெறும் வாய்ச்சவால் விடுவதற்கு மாத்திரமே சிறப்பானவர்களாக காணப்படுகின்றனர்.

தமது பிரதேசத்தில் இவ்வாறான ஒரு நிலைமை காணப்படுவது தொடர்பில் அறிந்துகொள்ளவோ அதற்கான நடவடிக் கையை தமது ஆட்சியில் உள்ள சுகாதார அமைச்ச ருடன் உடன் கதைத்து செயல்படுத்தவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்காதவர்கள் தான் மீண்டும் மக்களிடம் பொய்களை கூறி திசை திருப்ப முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

தற்போதைய ஆளும்தரப்பு எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை மாத்திரமல்ல, தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களைக்கூட கேட்பதற்கு தயாரில்லை என்பதற்கு தேசிய மக்கள் சக்தியின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களே சாட்சியாக உள்ளனர்.

மக்கள் மத்தியில் சென்று அவர்களின் தேவைகளை அறிந்துகொள்ள முடியாத பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தாம் பெரும் சாதனைகளைச் செய்துவிட்டதாக தம்பட்டம் அடிப்பதிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனரே தவிர, தினமும் பல ஆயிரக்கணக்கான மக்கள் சிகிச்சை பெறும் வைத்தியசாலையின் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாதவர்களாகத்தான் இவர்கள் உள்ளார்கள்.

இது மாத்திரமன்றி வவுனியா வைத்தியசாலையில் கோலாகலமாக திறக்கப்பட்ட இருதய சிகிச்சை பிரிவு இதுவரை செயற்படுத்தப்பட முடியாமல் வைத்திய நிபுணர்கள் இன்றி மூடப்பட்ட நிலையில் காணப்படுகிறது. இது தொடர்பிலும் அவர்கள் அக்கறை எடுத்ததாகத் தெரியவில்லை.

எமது கருத்துக்களை கேட்கக்கூடத் தயாராக இல்லாத இந்த ஆளும்தரப்பு, தாமாகவாவது தங்களது பிரதேசத்தின் தேவைகளை அறிந்து, அவற்றை செயற்படுத்த முன்வர வேண்டும் என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## மேடைகளில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படைவாத அமைப்புகள் இருப்பதாக தெரிவித்து வரும் கருத்துக்கள் தொடர்பில் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் அடிப்படைவாத அமைப்பொன்று இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். அவ்வாறு அடிப்படைவாத அமைப்புகள் இருக்குமானால் அது தொடர்பாக பகிரங்க மேடைகளில் தெரிவித்துக்கொண்டிருக்காமல், பாதுகாப்பு பிரிவில் அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் பிரிவுளுக்கு அறிவித்து, விசாரணை மேற்கொண்டு சட்டத்தை நிலைநாட்டவேண்டும். அவ்வாறு இல்லாமல் ராஜபக்சவினர் செயற்பட்டதுபோல், இந்த நாட்டில் அடிப்படைவாத அமைப்புகள் இருப்பதாக பகிரங்க மேடைகளில் தெரிவித்து இனங்களுக்கிடையில் சந்தேகத்தை ஏற்படுத்தவேண்டாம் என ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறோம்.

நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்தே இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. ஆனால், ஜனாதிபதியின் இந்தக்கூற்று நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடியதல்ல. மாறாக, இனங்களுக்கிடையில் சந்தேகத்தை ஏற்படுத்தும் நம்பகத்தன்மையை இல்லாமல் செய்யும். ராஜபக்சவினரும் கடந்த காலங்களில் இவ்வாறான பேச்சுக்களை பகிரங்க மேடைகளில் பேசி, நாட்டில் இனங்களுக்கிடையில் பெரும் மோதல்களை ஏற்படுத்தி இருந்தார்கள்.

அதனால் ஏதாவது அடிப்படைவாத அமைப்புகள் நாட்டில் இருக்குமானால் அது வடக்கிலா. கிழக்கிலா, மேற்கிலா, தெற்கிலா என்பதில் பிரச்சினை இல்லை. அவர்களுக்கு எதிராக உடனடியாக சட்டத்தை நிலைநாட்டுமாறு ஜனாதிபதி தனக்கு கீழ் இருக்கும் பொலிஸாருக்கு, இராணுவத்தினருக்கு அறிவிக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் ஜனாதிபதி மக்கள் கூட்டங்களுக்குச் சென்று, அடிப்படைவாத அமைப்புகள் இருப்பதாக பரப்புரை செய்வது அதற்கான பதில் அல்ல.

ஜனாதிபதி தொடர்ந்தும் அதனை தெரிவித்து வருவாரானால், அவருக்குள் வேறு நிகழ்ச்சி நிரல் இருக்கவேண்டும் என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. அதனால் இந்த நாட்டில் சந்தேகம், நம்பிக்கையற்ற, வெறுப்பூட்டும் பிரசாரங்களை மீண்டும் மேற்கொள்ள வேண்டாம் என ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## உயிர்த்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்தெழுந்ததை நினைவுகூரும் வகையில், உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களைப் போலவே, நமது நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களும் ஈஸ்டர் தினத்தை உற்சாகத்துடன் கொண்டாடுகின்றனர்.

இயேசு கிறிஸ்து மனித இதயத்தில் உள்ள இருளை அகற்றி, புதிய நம்பிக்கையை வழங்கி, மனித வாழ்க்கையை மாற்றும் திறனை வெளிப்படுத்தியது இதன் சிறப்பம்சமாகக் கருதலாம். ஆனால், 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தன்று நமது நாட்டில் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சில ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட அந்த மனிதாபிமானமற்ற தற்கொலைத் தாக்குதலால் இன்றும் நமது நாட்டின் கத்தோலிக்க மக்கள் பெரும் துயரத்தில் உள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பிறகு, அதைப் பயன்படுத்தி அரசியல் அதிகாரத்தைப் பெற்ற சில அரசியல் கட்சிகளின் கீழும், தற்போதைய அரசாங்கத்தின் கீழும், இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகளுக்கு உரிய தண்டனை வழங்க முடியாததால், 6 ஆண்டுகள் கடந்தும், இந்தத் தாக்குதலில் உயிரிழந்த, கைகால்களை இழந்த, உறவினர்களையும் நண்பர்களையும் இழந்த மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என்பது தெரிகிறது.

தேர்தல் காலத்தில் பல்வேறு தரப்பினரும் இவர்கள் இழந்த நீதியை வழங்குவதாக அரசியல் மேடைகளில் சத்தமிட்டாலும், அதிகாரத்தைப் பெற்ற பிறகு எந்த ஆட்சியாளரும் இவர்களுக்குரிய நீதியை வழங்க விரும்பவில்லை என்பது இன்றும் தெளிவான உண்மையாகும்.

எனவே, வீண் பேச்சுக்களையும், பொய் வாக்குறுதிகளையும் தவிர்த்து, இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் நீதி கிடைக்க அனைவரும் செயல்பட வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கங்களையும்,

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# பிரதேச அபிவிருத்தி தொடர்பில் ஆளுங்கட்சியினர் கவனம் செலுத்த வேண்டும் என்கின்றார் செல்வம்

## வவுனியா வைத்தியசாலை குளிரூட்டி பழுது தொடர்பில் கருத்து

ஆளுங்கட்சியை சேர்ந்த பிரதி அமைச்சர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் வன்னி பிரதேசத்தில் இருந்த போதிலும் வவுனியா வைத்தியசாலையில் பல நாள்களாக இயங்காமல் இருக்கின்ற பிரேத அறையின் குளிரூட்டி சீர் செய்வது தொடர்பில் தமது சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்லாமை கவலைக்குரிய விடயம் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையின் குளிரூட்டி பல மாதங்களாக செயற்படாமல் காணப்படுகின்றது. இதன் காரணமாக மரணமடைந்தவர்களின் உறவினர்கள் தமது சொந்த செலவில் சடலத்தை செட்டிகுளம் வைத்தியசாலையின் குளிரூட்டியில் வைத்து மீண்டும் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையை ஏற்பட்டுள்ளது.

பல ஆயிரக்கணக்கான பணத்தை செலவழித்து சடலத்தை செட்டிகுளத்துக்கும் வவுனியாவுக்கும் கொண்டு செல்ல வேண்டிய நிலைமை உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ஏற்படுகின்றது. இது இந்த பிரதேசத்து மக்களிற்கு பாரிய சுமையை ஏற்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகும்.

தமது ஆட்சியில் பாலும் தேனும் ஓடும் என்று அறிக்கை விட்டு மக்களை பொய்யாக திசை திருப்பி பிரதி அமைச்சுக்களையும், நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக் கொண்ட தேசிய மக்கள் சக்தியினர் வெறும் வாய்ச் சவால் விடுவதற்கு மாத்திரமே சிறப்பானவர்களாக காணப்படுகின்றனர்.

தமது பிரதேசத்தில் இவ்வாறான ஒரு நிலைமை காணப்படுவது தொடர்பில் அறிந்து கொள்ளவோ அதற்கான நடவடிக்கையை தமது ஆட்சியில் உள்ள சுகாதார அமைச்சருடன் உடன் கதைத்து செயல்படுத்தவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்காதவர்கள் தான் மீண்டும் மக்களிடம் பொய்களை கூறி திசை திருப்ப முயன்று கொண்டிருக்கிறார்கள்.

தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை மாத்திரமல்ல தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை கூட கேட்பதற்கு தயாரில்லை என்பதற்கு தேசிய மக்கள் சக்தியின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களே சாட்சியாகவுள்ளனர்.

மக்கள் மத்தியில் சென்று அவர்களின் தேவைகளை அறிந்து கொள்ள முடியாத பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தாம் பாரிய சாதனைகளை செய்து விட்டதாக தம்பட்டம் அடிப்பதிலேயே காலத்தை கடத்தி வருகின்றனரே தவிர ஒரு அத்தியாவசிய தேவையாக காணப்படுகின்ற வடக்கில் முக்கியமானதினமும் பல ஆயிரக்கணக்கான மக்கள் சிகிச்சை பெறும் வைத்திய சாலையின் தேவைகளை கூட நிறைவேற்ற முடியாதவர்களாக தான் இவர்கள் உள்ளார்கள் என்பதை உண்மை.

இது மாத்திரமன்றி வவுனியா வைத்தியசாலையில் கோலாகலமாக திறக்கப்பட்ட இருதய சிகிச்சை பிரிவு இதுவரை செயல்படுத்தப்பட முடியாமல் வைத்திய நிபுணர்கள் இன்றி மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இது தொடர்பிலும் அவர்கள் அக்கறை எடுத்ததாகத் தெரியவில்லை.

எமது கருத்துக்களை கேட்க கூட தயாராக இல்லாத இந்த அரசாங்கம் தாமாவது தங்களது பிரதேசத்தில் தேவைகளை அறிந்து செயற்படுத்த முன்வர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

100

# பள்ளிவாசல் நிர்மான பணியை நேரில் பார்வையிட்டார் எம்.பி.

அல் - மனார் ஜுூம்ஆ பள்ளிவாசல் நிர்மாணப்பணிகளை பார்வையிட்டார் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்.

ஸ்ரீலங்கா ஹிரா பவுண்டேஷனின் அனுசரணையில் காத்தான்குடி கர்பலாவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற அல் - மனார் ஜுூம்ஆ பள்ளிவாசல் நிர்மாணப் பணிகளை ஸ்ரீலங்கா ஹிரா பவுண்டேஷன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், ஹிரா பவுண்டேஷன் செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம் மும்தாஸ் (மதனி) அவர்களும் பார்வையிட்டனர்.

இதன்போது, பள்ளிவாசல் நிர்மாணப்பணிகளை விரைவாக நிறைவு செய்வதற்கு முயற்சிக்குமாறு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஆலோசனை வழங்கினார்.





# காதலியுடன் 'செல்பி' போட்டவர் மனைவின் தம்பி குத்திக் காயம்

(கிஷாந்தன்)

நபரொருவர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டு, மோட்டார் சைக்கிள் தீ வைத்து கொளுத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் திம்புள்ள - பத்தன பொலிஸில் வியாழக்கிழமை மாலை சரணமடைந்த நிலையில் கைது செய்யப்பட்டனர்.

சம்பவத்தில் கொட்டகலை பகுதியை சேர்ந்த நபரொருவரே காயமடைந்துள்ளார். அவர் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகின்றார்.

தாக்குதலுக்கு இலக்கான நபர் ஐந்து வருடங்களுக்கு முன்னர் கொட்டகலை பகுதியை சேர்ந்த பெண்ணொருவரை சட்டபூர்வமாக திருணம் செய்துள்ளார்.

எனினும், கொட்டகலை பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு பெண்ணுடன் திருமணத்துக்கு புறம்பான உறவை பேணி வந்துள்ளார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த சட்டப்பூர்வமான மனைவி மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக தாக்குதலுக்கு இலக்கான பெண், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கணவர் ஆகியோர் திம்புள்ள, பத்தன பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

விசாரணையின்போது பொலிஸார் முன்னிலையில், தனது மனைவியுடன் சமரசத்துக்கு வருவதாக அந்நபர் கூறியுள்ளார்.

வெளியே வந்த பிறகு சட்டத்துக்கு புறம்பான உறவை பேணும் பெண்ணுடன் இணைந்து கொட்டகலை பகுதியில் செல்பி படம் எடுத்துள்ளார். அதனை கண்ட, குறித்த நபரின் சட்டபூர்வமான மனைவியின் சகோதரன், அவர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தியுள்ளார். மோட்டார் சைக்கிளையும் கொளுத்தியுள்ளார்.

அதன் பின்னர் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் பொலிஸில் சரணடைந்துள்ளனர்.

வெட்டு காயங்களுக்கு இலக்கான நபர், மேலதிக சிகிச்சைகளுக்காக கிளங்கள் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

பொலிஸில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும், நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

# இந்த ஆண்டில் இதுவரை டெங்கால் 5 பேர் இறப்பு

## 14,678 பேர் பாதிப்பு

டெங்கு காய்ச்சல் காரணமாக இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 5 பேர் உயிரிழந்ததோடு, 14,678 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில், அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலேயே பதிவாகியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

தற்போது நாட்டில் டெங்கு நோய்ப்பரவல் அதிகரித்து வருவதால் இவ்வார இறுதியில் பிராந்திய மட்டத்தில் டெங்கு ஒழிப்புத் திட்ட செயற்பாடுகளை பாடசாலைகளில் முன்னெடுக்கவுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 2024ஆம் ஆண்டில் மொத்தமாக 49,870 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அரசுத் தலைவரின் கருத்து மிக மிக மோசமானது

தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறாத உள்ளாட்சி சபைகளின் முன்மொழிவுகளுக்கு நிதி ஒதுக்குவதற்கு ஒன்றுக்குப் 10 டவைகள் யோசிப்போம் என்று அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்த கருத்துக்கு எதிர்க் கட்சிகள் தரப்பிலிருந்து கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

''அரசுத் தலைவர் பொய்கூறி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்'' என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். ''இது மக்களுக்கு இலஞ்சம் கொடுக்கும் செயல்'' என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் காட்டமாகத் தெரிவித்துள்ளார். இது ''மக்களை அச்சுறுத்துகின்ற கருத்து'' என்று புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். அரசுத் தலைவரின் கருத்து ''ஒழுக்கத்துக்கு முரணானது'' என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் வருண தீப்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். அநுரகுமார தெரிவித்திருப்பது ''எதேச்சதிகாரப்போக்கிலான ஒரு அராஜக செயற்பாடாகும்'' என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இப்படிப் பல்வேறு தலைவர்களும் கடும் கண்டனங்களையும் கருத்துக்களையும் தெரிவித்து வருகின்றார்கள். அரசுத் தலைவரின் கருத்தில் கூர்ந்து கவனிக்கவேண்டிய மற்றொரு விடயமும் உள்ளது. இந்தக் கருத்தை அவர் முதலில் கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், கிண்ணியாவில்தான் தெரிவித்தார் என்று செய்தி வெளியானது. அதன் பின்னர் அதே கருத்தை மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் அவர் தெரிவித்திருக்கிறார். இதே கருத்தை இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள, குறிப்பாக சிங்களப் பகுதிகளில் அவர் தெரிவித்தார் என்று செய்திகள் எவையும் இல்லை. அப்படியானால் வடக்கு கிழக்கில் உள்ள உள்ளாட்சி சபைகள் ஆளும்தரப்பின் கட்டுப்பாட்டுக்குள் வரப்போவதில்லை என்று அரசுத் தலைவர் நம்புகிறார் என்பது ஒரு விடயம். அப்படி நம்புவதன் காரணமாக அவர் தமிழ் பேசும் மக்களை மிரட்டிப் பணிய வைத்து சபைகளைக் கைப்பற முயற்சிக்கிறார் என்பது மற்றொரு விடயம்.

வடக்குகிழக்கில்கடந்த 4 மாதகாலத்தில்ஆளும்தரப்புக்குஎதிரான உணர்வலை உயர்ந்து வருவது தெளிவாகவே உணரப்படுகின்றது. அரசுத்தலைவர்தேர்தலில்அநுரகுமாரதிசநாயக்கவெற்றிபெற்றதும் அவர், தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் வாக்குறுதியளித்த விடயங்களில் உருப்படியாக எதையாவது விரைந்து செய்வார் என்ற எதிர்பார்ப்பு தமிழ்பேசும் மக்களிடம் இருந்தது உண்மை. அதன் பிரதிபலிப்பே நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் ஆதரவாக வெளிப்பட்டது. ஆனால், அரசியல் கைதிகள் விடுதலை, படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளின் விடுவிப்பு, பொருள்களின் விலைக் குறைப்பு, எரிபொருள் விலைக் குறைப்பு, அரிசித் தட்டுப்பாடு நீக்கம், மாகாண சபைத் தேர்தல், காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினை தொடர்பிலான புதிய அணுகுமுறை என்பவற்றில் உடனடியான பிரதிபலிப்புக்களைத் தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக இந்தப் பிரச்சினைகளில் தேர்தல் வாக்குகளை மையமாகக் கொண்டு ஓரிரு வீதிகளைத் திறப்பது, மிகச் சொற்ப அளவில் எரிபொருள் விலையைக் குறைப்பது என்று ஆளும்தரப்பு நாடகமாடியதே தவிர உருப்படியாக எதையும் செய்யவில்லை. பதிலாகச் ''செய்வோம் செய்வோம்'' என்று மீண்டும் மீண்டும் கருத்துத் தெரிவித்து வருவதை மட்–டுமே செய்கிறது. இதனால் விரக்தியடைந்திருக்கும் தமிழ்பேசும் மக்களிடம் ஆளும்தரப்பு மீதான கவர்ச்சி மங்கத் தொடங்கியிருக்கிறது. இதனால் அச்சம் கொண்டு, நிதி தரமாட்டோம் என்று மிரட்டியாவது ஆளும்தரப்புப் பக்கம் அவர்களை இழுப்பதற்கு முயன்றிருப்பது மிகவும் கீழ்த்தரமான அரசியல்.

அவரது இந்தக் கருத்து தேர்தல் சட்டங்களுக்கு முரணானது என்கிற முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். அது தொடர்பில் ஆராய்ந்து ஒரு முடிவு அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தேர்தல் நேர்மையாகவும் சுயாதீனமாகவும் நடப்பதை உறுதிப்படுத்துகின்ற பொறுப்பும் கடமையும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு மாத்திரம் உடையதல்ல. இலங்கையின் அரசுத் தலைவர் என்கிற முறையில் அந்தப் பொறுப்பும் கடமையும் அரசுத் தலைவருக்கும் உண்டு. அதை உதாசீனம் செய்து அநுரகுமார நடப்பது முற்றிலும் அபத்தம். இதுவரை

# நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற இளைஞன் திடீரென மாயம்

(கிஷாந்தன்)

நாவலப்பிட்டி கலபட நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற இளைஞன் ஒருவர் காணாமல் போயுள்ளார் என நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி வெஸ்டோல் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் ஜாக்சன் என்ற 20 வயது இளைஞரே காணாமல் போயுள்ளார்.

காணாமல் போன இளைஞர், அவரது நான்கு நண்பர்களுடன், வியாழக்கிழமை காலை கலபட நீர்வீழ்ச்சிக்கு கட்டுப்பாட்டாளர்களுக்கு தெரிவிக்காமலும், பிரதான நுழைவாயிலில் பற்றுச்சீட்டுக்களைப் பெறாமலும் சென்றுள்ளார்.

மேலும் நீர்வீழ்ச்சிக்கு மேலே உள்ள காட்டின் வழியாக சட்டவிரோதமாக நீர்வீழ்ச்சிக்கு சென்றுள்ளனர்.

காணாமல்போனஇளைஞன்கொழும்பில் வேலை செய்பவர் எனவும் புத்தாண்டு விடுமுறைக்காக வீடு திரும்பியிருந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறையில் வந்தவர் தனது நண்பர்களுடன் வெளியே சென்றிருந்தபோது இவ்வாறு காணாமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலபட நீர்வீழ்ச்சியில் மூழ்கி உயிரிழந்த மேற்படி இளைஞனின் உடலைத் தேடுவதற்காக மக்கள் நடவடிக்கை எடுத்தபோதிலும், அவர்களால் உடலைக் கண்டுபிடிக்க முடியவில்லை, எனவே சடலத்தைக் கண்டுபிடிக்க கடற்படையினரின் உதவியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

### தந்தை செலுத்திய

# டிப்பர் சில்லுக்குள் சிக்கி நசுங்கி ஒன்றரை வயது பாலகன் இறப்பு

### கிளிநொச்சியில் பரிதாபம்

கிளிநொச்சி பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளிநொச்சி அம்பாள் குளம் பகுதியில் ஒரு சிறுகுழந்தை உயிரிழந்துள்ளது.

தவக்குமார் சிந்துஜன் எனும் ஒன்றரை வயது நிரம்பிய பச்சிளம் பாலகனே உயிரிழந்தான். தந்தை பின்புறம் கவனிக்காது டிப்பர் வாகனத்தைச் செலுத்தியபொழுது, டிப்பரின் பின்புறம் விளையாடிக் கொண் டிருந்த சிறுவன் உடல் நசுங்கி உயிரிழந்தான்.



இச்சம்பவம் தொடர்பாக பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 316

# சம்மாந்துறை பகுதியில் மின்னல் தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு


(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை செனவட்டை பிரதேசத்தில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவரே இவ்வாறு மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றுள்ளதோடு, மரணமடைந்தவர் சம்மாந்துறை, சென்னல்கிராமம் 02 பிரதேசத்தைச்சேர்ந்த 27 வயதுடையவராவார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார்



மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கருத்தரங்கு

(ஜிப்ரான்)

சி.எஸ்.சி நிறுவனம் ஊடாக கல்வி பொதுதர சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான பாடத்தெரிவு மற்றும் எதிர்கால இலக்கு தொடர்பான கருத்தரங்கு வியாழக்கிழமை மாலை 4.00 மணி அளவில் தி-மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் (தேசிய பாடசாலை) இடம் பெற்றது.

இதன் பொழுது 60 இற்கு மேற்பட்ட மாணவர்கள்



கலந்து சிறப்பித்து இருந்தனர்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக சி.எஸ்.சி. நிறுவனம் தலைவர் இஹ்சான் (றவ்மி) மற்றும் தி.மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் ஆலோசனை வழிகாட்டல் பாட ஆசிரியை எட்.ஆர்.எம்.ஹஸைன் மற்றும் சி.ஓசி. நிறுவனத்தின் உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து சிறப்பித்து மாணவர்களுக்கான சிறப்பு வழிகாட்டல்களையும் வழங்கி வைத்தனர்.

# கிழக்கு மாகாணத்திலும் பலத்த பாதுகாப்புடன் பெரிய வெள்ளி சிலுவை வழிபாடுகள் நடந்தன!

(சக்திவேல்)

உலகவாழ் கிறிஸ்தவ பொதுமக்கள் தவக்காலத்தின் சிறப்பு நாளான பெரிய வெள்ளி முன்னிட்டு மட்டக்களப்பில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் வெள்ளிக் கிழமைகாலைசிலுவைப்பாதை பாடுகளின் வழிபாடுகளில் உணர்வு பூர்வமாக பலத்த பாதுகாப்புடன் முன்னெடுக்கப்பட்டன

இதேவேளைமட்டக்களப்பில் பழைமை வாய்ந்த மரியாள் தேவாலயத்திலும் ஆலய பங்குத்தந்தை லெஸ்லி ஜெயகாந்தன் தலைமையில் பெரிய வெள்ளி சிலுவை பாதை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன

ஆலயத்தில் இருந்து ஆரம்பமான இந்த சிலுவைப் பாதை ஊர்வலம் நகரின் பிரதான வீதிகள் ஊடாக சென்று மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது. இந்த சிறப்பு வழிபாடுகளில் அதிக அளவிலான கிறிஸ்தவ பொதுமக்கள் கலந்து கொண்டனர்.







மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை காணக்கூடியதாக இருந்தது.

# மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் நடந்த பெரிய வெள்ளி வழிபாடுகள்

(சக்திவேல்)

மட்டக்களப்பு மாவட்ட கிறிஸ்தவ பொதுமக்கள் தவக்காலத்தின் பெரிய வெள்ளி முன்னிட்டு மட்டக்களப்பில் உள்ளகிறிஸ்தவ தேவாலயங்களில் வெள்ளிக்கிழமை காலை சிலுவைப் பாதை பாடுக ளின் வழிபாடுகள் பலத்த பாதுகாப்புடன் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை மட்டக்களப்பில் உள்ளசீயோன் தேவாலயத்திலும் தேவாலயத்தின்பிரதானபோதகர் ரோஷான்மகேசன்தலைமையில் பெரிய வெள்ளி சிலுவை பாதை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இயேசுபிரான் சிலுவையில் அடையப்பட்டபாடுகளின்காட்சிகளும்நேற்றையபெரிய வெள்ளி வழிபாடுகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

பெரியவெள்ளியின்மகத்துவம் பற்றி ஆலய பிரதம போதகர்கள்



இங்கு விசேட இந்த சிறப்பு உறைகளும் இடம்பெற்றன. வழிபாடுகளில் அதிக அளவிலான கிறிஸ்தவ பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# பெரிய வெள்ளி வழிபாடுகள் கிளிநொச்சியில் சிறப்புற்றன

பெரிய வெள்ளி பூசை வழிபாடுகள் மற்றும் சிலுவைப் பாதை வழிபாடுகள் கிளிநொச்சி மாவட்டத்திலும் தேவாலயங்களில் சிறப்பாக இடம்பெற்றன. பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் புனித திரேசாள் ஆலயத்தின் காட்சிகள்.... 316





வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# உள்ளாட்சி தேர்தல் 2025

## கிளி. மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைகளிலும் 66 பேரை தெரிவுசெய்வதற்காக 659 பேர் போட்டி

### மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கரைச்சி பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடலின் பின்பு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ந்துதெரிவிக்கையில்இம்முறைகிளிநொச்சி மாவட்டத்தில் 102387பேர் இந்த உள்ளூராட்சி தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

கரைச்சி பிரதேச சபையில் 35 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 342பேர் போட்டியிடுகின்றனர் எனவும் பச்சிலைபள்ளி பிரதேச சபையில் 13பேரை தெரிவு செய்வதற்காக 128 பேர் போட்டியிடுகின்றனர் எனவும் பூநகரி பிரதேச சபையில் 18பேரை தெரிவு செய்வதற்காக 189பேர் போட்டியிடுகின்றனர் எனவும் தெரிவித்தார். 316

## மு.கா. வட்டார அலுவலகம் மண்டலக்குடாவில் திறப்பு

(சியாஜ்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் கற்பிட்டி பிரதேச சபைத் தேர்தலில் மரச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. இதன்படி கற்பிட்டி மண்டலக்குடா வட்டாரத்தில் மரச்சின்னத்தில் போட்டியிடும் சுவிஸ் பைசல் மற்றும் மௌலவி றிப்கான் றஹ்மானி ஆகிய இருவரின் தேர்தல் பிரசார காரியாலயம் கட்சியின் உயர் பீட உறுப்பினர் ஏ.எச் எம் பைரூஸால் திறந்து வைக்கப்பட்டது.



கற்பிட்டி பிரதேச சபையில் ஸ்ரீ



லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக மண்டலக்குடா வேட்பாளராக போட்டியிடும் எம்.ஏ. சுவிஸ் பைசல் தலைமையில் இடம்பெற்ற இக் காரியாலயத் திறப்பு விழாவில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கற்பிட்டி அமைப்பாளரும் உயர்பீட உறுப்பினருமான எம் எச் எம் ஹில்மி மற்றும் கற்பிட்டி நகரில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக வேட்பாளர்களாககளம்இறங்கியுள்ள எம் எச் எம் சியாஜ், எம்.ஏ பைசல், எம்.டி றிப்கான் ( றஹ்மானி) ஆகியோருடன் முன்னாள் கற்பிட்டி பிரதேச உப தலைவர் எம்.என்.எம் பசீர் ஆகியோருடன் கட்சியின் முக்கியஸ்தர்கள் போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கற்பிட்டி அபிவிருத்தியின் முக்கிய பங்காளி மு.காவே

### அதன் வேட்பாளர் முஸம்மில் கூறுகிறார்

(சியாஜ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அன்று தொடக்கம் கற்பிட்டி நகரின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றியுள்ளது. என கற்பிட்டி பிரதேச சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை வேட்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மில் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது -

கற்பிட்டி வைத்தியசாலைக்கான ஐந்து மாடி கட்டடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கற்பிட்டி அமைப்பாளர் எம்எச்எம்ஹில்மியின் வேண்டுகோளின் பெயரில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினரும் உயர் பீட உறுப்பினருமான எஸ் எச் எம் நியாஸ் முயற்சியின் ஊடாக முன்னாள் சுகாதார அமைச்சராக இருந்த முஸ்லிம் காங்கிரஸின் பைசல் காசிம் மூலம் வழங்கப்பட்டது எனவும் -

மேலும் கற்பிட்டியில் தற்காலிகமாக பௌத்த மதஸ்தானத்தில் இடம்பெற்று வந்த கற்பிட்டி நீதிமன்ற செயற்பாடுகளுக்கான இன்றைய நிரந்தர நீதிமன்ற கட்டடத்தையும் முன்னாள் நீதி அமைச்சராக இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வழங்கி வைத்தார். அத்தோடுகற்பிட்டி பொதுவிளையாட்டு மைதானத்தின் தேவைப்பாடு காணப்பட்ட நிலையில் தனியாரின் ஆக்கிரமிப்புக்குஉட்பட்டிருந்தஇடத்தை நீதிமன்றம் வரை சென்று பொது மக்களுக்கு பெற்றுக் கொடுத்ததில் முக்கிய பங்கு வகித்தவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர் பீட உறுப்பினர் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம் நியாஸ் என்தை இந்த தருணத்தில் தெரிவிப்பதாக குறிப்பிட்ட தலைமை வேட்பாளர் முஸம்மில் -

இன்ஷா அல்லாஹ் இம்முறை இடம்பெற உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கற்பிட்டி பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வழங்குதன் மூலம் கற்பிட்டியின் அபிவிருத்தி மேலோங்கி நிற்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்பதாகவும் தெரிவித்தார்.

## ஓட்டமாவடியைக் கட்டியெழுப்ப எமக்குச் சந்தர்ப்பம் தாருங்கள்

### ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபையில் மு.கா. சார்பாக போட்டியிடும் மீராவோடை மேற்கு வேட்பாளர் ஐ.எம்.றிஸ்வினை ஆதரித்து பிரசார கூட்டம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எஸ்.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது அவர் கருத்துத்தெரிவிக்கையில் -

ஓட்டமாவடி மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். நீங்கள் சிந்தித்து வாக்களித்து ஒன்பது வட்டாரங்களையும் வெற்றி பெற வைத்து, சபையை எங்களிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியாக இருங்கள்.

எதிர்வரும் நான்காண்டுகளுக்கு, சகல அதிகாரங்களையும் கொண்டு நாங்கள் உங்கள் பிரதேசத்தைக் கட்டியெழுப்புவோம். அதற்கான முழுமையான சந்தர்ப்பதையும் எமக்குத்தாருங்கள் என அவரது உரையில் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்குடா தொகுதி அமைப்பாளரும் முதலாம் வட்டார வேட்பாளருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஹபீப் றிபான், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், ஓட்டமாவடி பிரதேச மத்திய குழு உறுப்பினர்கள், ஊர்ப்பிரமுகர்கள், பொதுமக்கள் எனப்பலரும் பங்கேற்றிருந்தனர்.

### தேசிய மக்கள் சக்தியின்

## கிளிநொச்சி நகர அலுவலகத்தை திறந்தார் அமைச்சர் சந்திரசேகரன்



தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி நகர கட்சி அலுவலகம் கடல்தொழில் அமைச்சர் சந்திரசேகரால் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்கு அமைச்சர் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் அசுத்தப்படுத்திய அரசியல் கலாசாரத்தை இந்த மக்கள் சுத்தப்படுத்தியிருக்கிறார்கள். அது போல கீழ் மட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளையும்சுத்தப்படுத்த வேண்டும். இலஞ்ச ஊழல் மோசடி இல்லாத வரலாறு புதியதொரு ஆட்சி மூலம் வந்துள்ளது.



தேசியம் தேசியம் என்று மக்களின் இரத்தத்தை சூடேற்றி அதில் குளிர்காய்ந்தார்கள் அதனை இன்றும் செய்கின்றனர். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து சபைகளையும் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு கையளிக்கவுள்ளனர். - என்றார். 316

# உள்ளாட்சி தேர்தல் 2025

## கடந்த உள்ளூராட்சி மன்றத்தைப்போல் சம்மாந்துறை பிரதேச சபை இருக்காது

### உதுமான் கண்டு நாபீர் தெரிவிப்பு

(ஸாகிர்)

எதிர்வரும்மே6ஆம்திகதிஇடம்பெறவிருக்கும்உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் சம்மாந்துறை பிரதேச சபை மாம்பழச் சின்னத்தின் கைவசமாகின்ற போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக அவர்கள் தனது பிரசாரத்தின் போது பயன்படுத்துகின்ற தேசிய மக்கள் சக்தியின் கைவசம் அல்லாது வேறு கட்சிகளின் அல்லது சுயேட்சை குழுக்களின் கைவசமாகின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கு எமது நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாது என்கிற பிரசாரத்தை பொய்யாக்கும் விதத்தில் எமது சம்மாந்துறை பிரதேச சபை அபிவிருத்தி காணும் என்று ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தலைவரும் சுயேச்சைக் குழு ஒன்று மாம்பழச் சின்னத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாபீர் பௌண்டேசன் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கலாநிதி உதுமான்கண்டு நாபீர் தனது கருத்தினை தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

நாம் ஒருபோதும் ஆட்சியாளர்களுக்கு மாற்றமாக செயற்படுபவர்கள் அல்லர். இருந்த போதும் எம்மால் அமையப்போகின்ற உள்ளூராட்சி மன்றத்திற்கு மத்திய அரசின் ஆலோசனை வழிகாட்டல் மற்றும் அனுமதியுடன் நாங்கள் வெளிநாடுகளில் உதவிகளைக் கொண்டு அனைத்து விதமான உள்ளூராட்சி மன்றங்கள் மாத்திரமல்லாது எமது அம்பாறை மாவட்டத்திற்கான அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு மக்களால் எமக்கு வழங்கப்படுகின்ற ஆணையை நாங்கள் நிச்சயம் சரியான முறையில் பயன்படுத்துவோம்.

இதுவரை காலமும் உள்ளூராட்சி மன்றங்களை ஆட்சி செய்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸாக இருக்கட்டும் அல்லது ஏனைய கட்சிகளாக இருக்கட்டும் எவருமே அபிவிருத்தியை நோக்கிய உள்ளூராட்சி மன்றங்களையோ அல்லது மக்களின் நலன் காக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களையோ கொண்டிருக்கவில்லை. நாங்கள் இவற்றை சரி செய்து உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக மக்களுக்கு கிடைக்கின்ற நலன்களை வெளிநாடுகளில் இருந்து பெறப்படுகின்ற நிதிகள் ஊடாகவும் ஏனைய உட்கட்டுமாணங்கள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாகவும் பாரிய திட்டத்தினைக் கொண்டு வந்து மக்களின் எதிர்கால வெளிச்சமான வாழ்க்கைக்கும் தொழில் அற்றவர்களுக்கு தொழில்களையும் வழங்கி சுய தொழில்கள் மற்றும் தொழிற்சாலைகளை அமைப்பதன் ஊடாக அந்த தொழிற்சாலைகளில் திறமை மற்றும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன் ஊடாக இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி, அவர்களுடைய சுபீட்சமான வாழ்க்கை வழி வகுப்பதற்கு பல திட்டங்களை முன் வைத்துள்ளோம். இதேபோன்று எமது உள்ளூராட்சி மன்றங்களுக்கு கீழ் அமைந்திருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி, சுய தொழில் வாய்ப்பினை உருவாக்கி, அதன் ஊடாகவும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்டும் பல தொழில் வழங்குனர்களை உருவாக்குவதற்கு நாங்கள் திட்டவரைபுகளை கொண்டிருக்கின்றோம்.

எனவே, தேசிய மக்கள் சக்தி கூறுகின்றது போல் எமது சம்மாந்துறை பிரதேச சபை அமையாது மாற்றமாக எமது பிரதேச சபையானது இலங்கையில் காணப்படுகின்ற பிரதேச சபைகளுக்கெல்லாம் மாதிரி பிரதேச சபையாக அமையும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

அரசியல் மேடைகளில் கூறுவது போன்று பழைய பஞ்சாங்கக் கதைகளை உரிமைகளை வென்றெடுப்போம் எமக்கான குரல்களாக ஒலிப்போம் என்கிற சொற்பதகங்களை மறந்து அவற்றோடு சேர்ந்த அபிவிருத்தி வாழ்வாதாரம் அனைத்தையும் உருவாக்கி, எமக்கென ஓர் அரசியல் கட்டமைப்பின் ஊடாக ஒரு சமூகத்தை முன்கொண்டு செல்ல



நாங்கள் அனைத்து திட்டங்களையும் வகுத்து இருக்கின்றோம். அதற்கான பாரிய முன்னேற்பாடுகளுடானான திட்டநகர்வுகள் அனைத்துமே செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. சமூக அபிவிருத்தி என்பது நாட்டின் ஆட்சியாளர்களால் வழங்கப்படுகின்ற நிதிகளைக் கொண்டு ஒருபோதும் நிவர்த்தி அடையாது. மாறாக எங்களால் வெளிநாடுகள் இருக்கின்ற முதலீட்டாளர்களையும் பாரிய நிறுவனங்களையும் அணுகி, அவர்கள் ஊடாக பெறப்படுகின்ற பாரிய நிதிகளை மக்களிடம் கொண்டுவந்து சேர்த்து, அவர்களுக்கான அபிவிருத்தி மற்றும் கட்டுமானங்கள் அனைத்தையுமே உருவாக்கிக் கொடுக்கின்ற போதுதான் காலாகாலமாக மேடைகளில் இவர்களால் கட்டவிழ்த்து விடப்படும் அபிவிருத்தி என்கின்ற பொய் வார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைத்ததாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## உயிர்த்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்போக்குத்தனமான போக்குகளையும் கடந்து, அனைவரும் ஒன்றிணைந்து நாடாக நல்ல எதிர்காலப் பயணத்திற்காக அணிதிரள வேண்டும் என இறுதியாக அனைவரிடமும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

## நிகழ்நிலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பிரசுரிக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நாடாளுமன்றத்தால் இந்தச் சட்டம் 2025ஆம் ஆண்டின்.... இலக்க நிகழ்நிலை பாதுகாப்பு தொடர்பான (நீக்கம்) சட்டமாக அடையாளப்படுத்தப்படும்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் 2024ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டமானது நீக்கப்படும் என்பதை கவனத்திற்கொள்ளவேண்டும்.

நிகழ்நிலை பாதுகாப்பு தொடர்பான (நீக்கம்) சட்டம் சான்றுரைப்படுத்தப்பட்ட தினத்தில் இருந்து 2024ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் பிரகாரம் ஏதேனும் ஒழுங்கு விதிகள் ஆக்கப்பட்டிருக்குமாயின் அவ்வாறான சகல ஒழுங்குவிதிகளும் நீக்கப்படும் என்பதையும் கவனத்திற்கொள்ளவேண்டும்.

இந்த சட்டத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பில் ஏதேனும் முரண்பாடான தன்மை காணப்படுமாயின் சிங்கள மொழிமூல பிரதிகள் ஏற்புடையதாக கருத்திற்கொள்ளப்படும்'.

நிகழ்நிலை காப்புச் சட்டம் நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்தச் சட்டம் தொடர்பில் சிவில் அமைப்பினர், ஊடகத்துறையினர் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் தீவிர கரிசனை கொண்டிருந்தனர். இந்த சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவுடன் பல்வேறு தரப்பினர் இந்த சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்தசட்டமூலத்துக்குஎதிராக47அடிப்படை உரிமைமீறல்வழக்குகள்உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இந்த சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானத்தில் 'சட்டமூலத்தில் 32 சட்ட பிரிவுகளை நிறைவேற்ற வேண்டுமாயின் அரசமைப்பின் 84(2)ஆம் உறுப்புரையின் பிரகாரம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தது.

நீதிமன்றம்முன்வைத்துள்ளதிருத்தங்கள் மற்றும் வழிமுறைகளுக்கு அமைய சட்டமூலத்தை நிறைவேற்றுவதாக இருந்தால், தனிப்பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என்று உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருந்தது.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் இரண்டு நாட்கள் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டு, 2024.01.24 அன்று 46 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 108 வாக்குகளும், எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

அதனைத்தொடர்ந்துஇந்தச்சட்டமூலத்தை அப்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சான்றுரைப்படுத்தினார். 2024 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டமாக அமுலுக்கு வந்தது.

இந்த சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் குழுநிலை வேளையின் போது கருத்திற்கொள்ளப்படவில்லை என்று எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்பினரும் கடும் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இவ்வாறான பின்னணியில் இந்த சட்டத்தைசபாநாயகர்சான்றுரைப்படுத்தியதை சவாலுக்குட்படுத்தி இலங்கை தமிழ் அரசுக் கட்சியின்முன்னாள்பாராளுமன்றஉறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த ஆண்டு மார்ச் மாதமளவில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் தொடர்பில் ஆராயும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு கிடையாது என்று குறிப்பிட்டு உயர்நீதிமன்றம் இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் இரத்து செய்தது.

இவ்வாறான பின்னணியில் இந்த சட்டமூலத்தை நீக்குவதாக தேசிய மக்கள் சக்தி தமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார்.

2024ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு காணப்படுகின்ற பின்னணியில் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இந்த சட்டத்தை இரத்து செய்வதற்கான தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தார்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுகுறித்துதேர்தல்கள்ஆணைக்குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி அமீர் பாயிஸிடம் வினவியபோது, ஜனாதிபதியின்மேற்குறிப்பிட்ட உரை தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும், அது குறித்து ஆராய்ந்ததன் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

அதேவேளை உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களில் பிறப்புச்சான்றிதழ் அத்தாட்சிப்படுத்தலுடன் தொடர்புடைய வகையில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் குறித்து உயர்நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் இரு வேறு தீர்ப்பினை வழங்கியிருக்கும் நிலையில், இது குறித்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்து தீர்வொன்றைப் பெற்றுத்தருமாறு தாம் சட்டமா அதிபருக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்துவருகிறார்என்றும்அவர்தெரிவித்தார்.

## ஊடகங்களுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

தேர்தல் பரப்புரை மேடைகளில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொய் கூறுவது மாத்திரமின்றி, அச்சுறுத்தல்களையும் விடுக்கின்றார். இவைமாத்திரமின்றி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பழைய கதைகளையும் தேடுகின்றார்.

அதற்கமைய மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் அந்த மாவட்டங்களின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி கூறிய விடயங்கள், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களாகும்.

முன்னாள் ஜனாதிபதி ரணிலின் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது மாத்திரமின்றி, கடந்த காலங்களில் அவர் கூறியவற்றையும் தற்போதைய ஜனாதிபதி மீளக் கூற ஆரம்பித்திருக்கின்றார். தற்போது அநுரகுமார திஸாநாயக்க, அநுர விக்கிரமசிங்கவாகியிருக்கின்றார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமக்கு வாக்களிக்காவிட்டால் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி அச்சுறுத்துகின்றார்.

நாட்டில் பொறுப்புள்ள எந்தவொரு அரசியல்வாதியும் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் திஸ்ஸமகாராம பிரதேச சபையை ஜே.வி.பி. கைப்பற்றியது. ஆனால் ஐக்கிய தேசிய கட்சி ஆளும்தரப்போ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆளும்தரப்போ திஸ்ஸமகாராம பிரதேச சபையை ஜே.வி.பியின் சபையாகக் கருதவில்லை. ஏனைய பிரதேச சபைகளைப் போன்றே அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டது. எனவே தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறாத உள்ளூராட்சிமன்றங்களுக்குநிதிஒதுக்கப்படாது என ஜனாதிபதி குறிப்பிடுவது ஒழுக்கத்துக்கு முரணானதாகும்.

இது தொடர்பில் செய்திகளை வெளியிடும் ஊடகங்களையும் ஜனாதிபதி அச்சுறுத்துகின்றார். ஜனாதிபதியால் தெரிவிக்கப்படும் இந்த கருத்துக்கள் முற்றுமுழுதாக தேர்தல் சட்டத்துக்கு முரணானதாகும் என்றார்.

## சட்டவிரோதமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தையிடி விகாரையின் கட்டுமானத்துக்கு முக்கிய கரணமாக இருந்தவர்கள் இந்த தேசிய மக்கள் சக்தி என்ற ஜேவிபியினர்தான் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனவாதத்துக்கு இடமில்லை என்று கூறும் அனுர அரசே தையிடி விகாரையின் கட்டுமானத்துக்கு முக்கிய கரணமாக இருந்தனர். இவர்களே அன்று இந்த திஸ்ஸ விகாரையின் கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் குறித்த பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தபோதும், விகாரையை அமைக்கும் நடவடிக்கைக்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் மதவாதம் பேசுவதாக கூறி சிங்கள மக்களை திசைதிருப்பி விகாரையை கட்டிமுடிக்கச் செய்திருந்தனர்.

இன்று குத்துக்கரணம் அடித்து மக்களை ஏமாற்றி எமது மக்களின் நலன்களை முன்னிறுத்திப் போராடும் தமிழ் அரசியல் கட்சிகள் மீது குறிப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மீது குற்றச்சாட்டை சுமத்தி அரசியல் செய்கின்றனர்.

இனவாதத்தை தூண்டும் இந்த தேசிய மக்கள் சக்தி தமிழ் கட்சிகள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களை கூறி அவர்களது உச்சபட்ச இனவாதத்தின் வெளிப்பாட்டை காடுகின்றனர். முன்னைய அரசதலைவரான கோட்டாவுக்குஇரண்டுவருடம்தேவைப்பட்டது அவரது உண்மை முகத்தைக் காட்ட. அனல் இந்த ஜேவிபியின் உண்மையான முகம் 6 மாதங்களுக்கள் வெளிப்படுவிட்டது. குதிப்பாக முன்னவர்கள் இனவாதிகள். அதை அவர்கள் வெளிப்படையாகவே காட்டினர். ஆனால் இவர்கள் அதைவிட மோசமனவர்கள். மக்களை நம்பவைத்து தம்வசப்படுத்தி கழுத்தறுக்க முயற்சிக்கின்றனர்.

இதேவேளை உள்ளூராட்சிமன்ற தேர்தல் பரப்புரை மேடைகளில் ஜனாதிபதியின் பரப்புரை பேச்சுக்கள் தமிழ் மக்களின் இருப்பை சூட்சகமாக இல்லாதொழிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கியதாகவே முன்னெடுப்பதாக உள்ளது.

இது அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசின் அச்சுறுத்தும் அரசியல் போக்காகவே இருக்கின்றது.

மக்களின் ஆதரவை பெறுவதற்காக பல வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய அனுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் அந்த வாக்குறுதிகளுள் ஒன்றைக்கூட நிறைவேற்றாது மீண்டும் புதிய பல வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றது. இது தமிழ் மக்களின் வாக்குகளை சூறையாடும் முயற்சியாக இருக்கின்றதே தவிர தமிழ் மக்களின் நலன்களுக்கானதாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை. இதை எமது மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். அத்துடன் இதன் வெளிப்பாட்டை உள்ளூராட்சித் தேர்தலிலும் வெளிப்படுத்த வேண்டும்.

அந்தவகையில்தமக்குவாக்களித்தால்தான் பிரதேச சபைகளுக்கு நிதி விடுவிக்கப்படும் என்ற ஜனாதிபதியின் கருத்தானது ஜனநாயக விரோதத்துக்கு இதைவிட வேறொரு உதாரணம் வேண்டுமா? என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# மாவடி ஜும்மா பள்ளியின் மதில் பணி குறித்து ஆய்வு

(நூருல் ஹுதா உமர்)

மாவடிப்பள்ளி கிராமத்தின் உட்கட்டமைப்பு மேம்பாட்டில் எப்போதும் கரிசனையுடன் செயற்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸின் ரி - 100 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் 06 மில்லியன் ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வரும் மாவடிப்பள்ளி ஜும்ஆ பெரியபள்ளிவாசலின் சுற்றுமதில்கள் மற்றும் பள்ளிவாசல் அபிவிருத்திப் பணிகளை வியாழக்கிழமை கள விஜயம் செய்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்கள் ஆராய்ந்தார்.

மாவடிப்பள்ளி ஜும்ஆ பெரியபள்ளி வாசலின் தலைவர் வை.வி. அப்துல் மனாப் தலைமையிலான நம்பிக்கையாளர்களை சந்தித்து ஜும்ஆ பெரியபள்ளிவாசலின் அபிவிருத்திப் பணிகள், ஊர்நலன் சார் விடயங்களை கலந்துரையாடிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்கள் தனது நிதியொதுக்கீட்டில் நடைபெறும் வேலைத்திட்டங்களை பார்வையிட்டதுடன் அடுத்தகட்ட பணிகளுக்கு தேவையான ஒழுங்குகள் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களின் வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல். நூருல் ஹுதா உட்பட முன்னாள் எம்.பி. ஹரீஸின் இணைப்பாளர்கள், நம்பிக்கையாளர்கள் என பலரும் கலந்து கொண்ட இந்த விஜயத்தின் போது தொடர்ச்சியாக மாவடிப்பள்ளி கிராமத்தின் வளர்ச்சியில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸதும், அவரது குடும்பத்தினரினதும் தொடர்ச்சியான பங்களிப்பு தொடர்பில் சிலாகித்து பேசிய ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள் அவரின் தொடர்ச்சியான மக்கள் பணிக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.








# அன்னை பூபதி நினைவு தினம் தொடர்பாக சமூக செயற்பாட்டாளருக்கு அழைப்பாணை

சிவில் சமூக செயற்பாட்டாளர் ச.சிவயோகநாதனுக்கு மட்டக்களப்பு கொக்குவில் பிரதேச பொலிஸாரால் விசாரணைக்கான அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை பி.ப 4.25 மணிக்கு அவரது வீட்டுக்குச் சென்ற மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸார் இருவரால் இன்று 19 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு அன்னை பூபதியின் நினைவு தினம் தொடர்பான விசாரணைக்கு வருமாறு காத்தான்குடி மற்றும் கொக்குவில் பொலாரால் கையொப்பமிடப்பட்ட கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதமானது சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளது. எனவே இதன்மூலம் தனது மொழி உரிமை மீறப் பட்டுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றியத்தின் தலைவரான ச.சிவயோகநாதன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் 19 ஆம் திகதி அன்னை பூபதியின் நினைவு தின நிகழ்வுகள் நடைபெற உள்ள நிலையில் மேற்படி விசாரணைகள் தொடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.








## தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான

# தேர்தல் ஆயத்த செயலமர்வு நேற்று யாழ்ப்பாணத்தில்

எதிர்வரும் மே மாதம் வியாழக்கிழமை ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பாக சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு வியாழக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இந்த செயலமர்வு நடைபெற்றது.

இதன் போது தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர் -

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நீதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றன எனவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தமது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டதுடன், எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் பொறுப்பாகநியமிக்கப்படும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் ஒவ்வொருவரும்வாக்களிப்பு நிலையங்களுக்குரிய முழுமையான பொறுப்பு மற்றும் அதிகாரம் கொண்டவர்களாக இருப்பதால் இத் தேர்தலில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் பங்களிப்பானது மிகக் காத்திரமானது எனத் தெரிவித்தார்.





மேலும் கடந்த தேர்தலில்களில் கற்றுக்கொண்ட பாடத்தினை அடிப்படையாகக்கொண்டு சில அசௌகரியங்கள் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு ஏற்பட்டிருந்தால் அவற்றை இம்முறை தவிர்த்து மேன்மேலும் வினைத்திறனாக செயற்படுமாறும் தெரிவித்ததுடன், இம் முறை வட்டார ரீதியாக வாக்கெண்ணல் நடைபெறவுள்ளதால் தங்களுக்குரிய பொறுப்புக்களை உணர்ந்தும் அதற்கான ஒத்துழைப்பினையும், ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் பார்வைக்குறைபாடுடையவர்களுக்கான வசதிகளை அறிவுறுத்தல்களுக்கு அமைய மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்குமாறும் தெரிவத்தாட்சி அலுவலர் கேட்டுக்கொண்டார்.

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளர் இ. சசீலனால் விளக்கமளிக்கப்பட்டது.



# உணவு கையாள்பவர்களுக்கு விழிப்புணர்வுடன் தடுப்பூசி

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட உணவு கையாள்பவர்களிற்கான விழிப்புணர்வு, மற்றும் நெருப்புக்காய்ச்சலிற்கான தடுப்பூசி ஏற்றும் நிகழ்வும் வியாழக்கிழமை நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் டி.எஸ். ஜெபரத்னம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் நிர்மலானந்தன் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் திருநெல்வேலி, கோண்டாவில், கொக்குவில், நல்லூர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் இருந்து உணவு கையாள்வோர் கலந்து கொண்டனர். உணவகங்கள்




உரிய சுகாதார முறைப்படி இயங்குவது தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் உணவு கையாளும் நிலையங்கள் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்யவேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை உணவகங்களிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் எனவும் பொது சுகாதார பரிசோதகர்களால் எச்சரிக்கை வழங்கப்பட்டது. பலதடவைகள் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டும் சில உணவகங்கள் தொடர்ந்தும் சுகாதார சீர்கேட்டுடன் இயங்குவது தொடர்பிலும் விசனம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் உணவு கையாள்பவர்களிற்கான நெருப்புக்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றப்பட்டது. இந்நிகழ்வில் 250 ற்கும் மேற்பட்ட உணவு கையாள்வோர் கலந்து கொண்டதுடன் 235 பேர் தடுப்பூசி ஏற்றிக்கொண்டனர்.

# வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக பைஷல்

(அபு அலா, ஜெபி ஜனார்த்)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கள் அமைச்சின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள இஷட்.ஏ.எம்.பைஷல் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.



வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த எம்.எம்.நஸீர் கடந்த 11 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே, கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக கடமையாற்றி வருகின்ற இஷட்.ஏ.எம்.பைஷல் அப்பதவிக்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக கடமையாற்றும் பொருட்டு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.04.2025இல் வெளியிடப்பெற்றது